# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **053/ந/2015**

ஆணை எண். **01/2016**

நாள் : **04/01/2016**

**திரு எல். பஞ்சநாதம்,**
**பூம்புகார் நகர், எடையார் பாளையம்,**
**கோயம்புத்தூர் – 641 025.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தேவகோட்டை நகராட்சி,**
**தேவகோட்டை.** – **எதிர் மனுதாரர்**

கோயம்புத்தூர் மாவட்டம், எடையார்பாளையம் கிராமம், பூம்புகார் நகர், 155 எண்ணிட்ட மனைப்பிரிவில் வசிக்கும் திரு எல். பஞ்சநாதம் அவர்களின் முறையீட்டு மனு 08.05.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 53/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், எடையார்பாளையம் கிராமம், பூம்புகார் நகரில் வசிக்கும் திரு எல். பஞ்சநாதம் அவர்கள் தேவகோட்டை நகராட்சி வார்டு எண்.11, கார்ப்பரேஷன் சாலை 4–வது குறுக்குத் தெரு முடியும் இடத்தில் தன்னிச்சையாக தனிநபர் ஒருவரால் கட்டப்பட்ட குறுக்குச் சுவரை அகற்ற ஆணையிடவேண்டி இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்திருந்தார். மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது.

2. மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் தேவகோட்டை நகராட்சி நகரளவு எண்.27/2 A1-ல் அமைந்துள்ளது என்றும், மேற்படி நகரளவை கணக்கில் வள்ளியப்ப செட்டியார் ஊருணி மற்றும் வள்ளி விகாஸ் கோவில் பிரைவேட் டிரஸ்ட் என நகர கணக்கில் தாக்கலாகியுள்ளது என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார். மேலும், இவ்விடம் நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்பதால் நகராட்சியால் அகற்ற இயலவில்லை என தனது அறிக்கையில் நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார்.

3. நகராட்சி ஆணயைரின் அறிக்கை முழுமையற்றதாக இருந்ததால், 06.10.2015 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேற்படி தேதியில் நடந்த விசாரணையின் பொழுது, அங்கீகரிக்கப்படாத மனைப் பகுதிகளுக்கு எவ்வாறு நகராட்சி மூலம் சாலை வசதி செய்தார்கள் என்ற விவரம் தனக்கு தெரியவில்லை என்றும், வேறொரு நாளில் நடக்கும் விசாரணையின் பொழுது தகுந்த விவரங்களை சமர்ப்பிக்கிறேன் என்று தேவகோட்டை நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பினை வகிக்கும் திரு பா. சக்திவேல் தெரிவித்தார்.

4. மேற்படி விசாரணையைத் தொடர்ந்து 26.10.2015 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகுமாறு நகராட்சி ஆணையர் (பொறுப்பு) அறிவுறுத்தப்பட்டார். இந்நிலையில் 16.10.2015 நாளிட்ட தனது கடிதத்தில் தேவகோட்டை நகராட்சி ஆணையர் (பொறுப்பு) அவர்கள், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்ததின் பேரில் நடவடிக்கை தொடரப்பட்டு மேற்படி சுவர் ஆக்கிரமிப்பு வருவாய் ஆய்வர், சுகாதார ஆய்வர் அலுவலக சிப்பந்திகள் மற்றும் காவலர்கள் முன்னிலையில் 16.10.2015 அன்று பிற்பகல் 3 மணி அளவில் ஆக்கிரப்பு முழுவதுமாக அகற்றப்பட்டது என்ற விவரத்தினை தெரிவித்திருந்தார். மேலும் 26.10.2015 அன்று நடைபெற்ற விசாணையின்போது மேற்படி அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் அங்கீகாரம் பெற உரிய வளர்ச்சிக் கட்டணம் மனை உரிமைதாரகளால் செலுத்தப்பட்டு நகராட்சியால் கட்டிட வரைபட அனுமதியும் வழங்கப்பட்டு, தார்ச்சாலை, குடிநீர்வசதி, தெருமின்விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், மேற்படி பாதை பொதுப்பாதை எனக் கருதப்பட்டு 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 180 (ம) 180–A–ன் படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என நகராட்சி ஆணையர் உறுதி செய்துள்ளார்.

5. மனுதாரருக்கும் 16.11.2015 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. தனது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த ஆக்கிரமிப்பு முழுவதுமாக அகற்றப்பட்டதை அறிந்து முழு திருப்தி அடைவதாகவும், தனது வயது முதிர்வின் காரணமாக 16.11.2015 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வர இயலவில்லை என்றும், இந்நேர்வில் மேல்நடவடிக்கை தேவையில்லை எனவும் 04.12.2015 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளார். மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்டது. எனவே, இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2016–** ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், **4–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

/உண்மை நகல்/

மு. பழனிவேல்

உதவி பதிவாளர்

10.1.18

9.1.18

பெறுநர்

1. **திரு எல். பஞ்சநாதம்,**
   **மனை எண்.155,**
   **பூம்புகார் நகர், எடையார் பாளையம்,**
   **கோயம்புத்தூர் – 641 025.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **தேவகோட்டை நகராட்சி,**
   **சேலம்(இணைப்புடன்).**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**